# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 226/பேரூ/2022**
**நாள் : 09.02.2023**

திரு. A. இராமசாமி,
இராசிபுரம்,
நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பிள்ளாநல்லூர் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், தேவாங்கர் திருமண மண்டபம், அண்ணா சாலை, க.எண்.2 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A. இராமசாமி என்பவரது 14.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.11.2022 அன்று பெறப்பட்டு 226/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம், தேவாங்கர் திருமண மண்டபம், அண்ணா சாலை, க.எண்.2 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A. இராமசாமி தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் மேற்படி விலாசத்தில் அலுவலகம் வைத்து செயல்பட்டு வருகிறேன். பிள்ளாநல்லூர் பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட பகுதியில் வாரசந்தை பிரதி ஞாயிறு அன்று நடைபெறும். நான் கடந்த (2021-22) ஆண்டில் பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் சார்பில் செய்தித்தாளில் விளம்பரம் வந்திருந்ததை பார்த்து 23 வாரங்கள் வாரச்சந்தை குத்தகையினை மறைமுக டெண்டர் முறையில் எடுத்து அதற்குரிய தொகையினை முழுவதும் செலுத்தி நடத்தி வந்தேன். இந்நிலையில் 2022-23ஆம் நிதியாண்டில் புது ஏல குத்தகை சம்பந்தமாக 24.03.2022, 28.03.2022, 30.03.2022, 01.04.2022 ஆகிய தேதிகளில் குறுகிய கால இடைவெளியில் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி, அரசு விதிகளில் உள்ள ஷரத்து எதையும் கடைபிடிக்காமல் செயல் அலுவலர் அவர்கள் தன்னிச்சையாக செயல்பட்டு ஏலத்தை காயம் செய்துள்ளார். மேற்படி ஏலத்தில் 01.04.2022 அன்று நானும் கலந்துகொண்டு, (17.03.2022) அன்று வெளியிடப்பட்ட குத்தகை உரிமை ஏலம் / ஒப்பந்தப் புள்ளி விளம்பரத்தில் உள்ள புதிய விதிமுறைகளின்படி சந்தை குத்தகை

வசூல் கட்டண உயர்வை செய்து வசூல் செய்துக்கொள்ளலாம் என்பதன் அடிப்படையில் நான் ஏல காப்புத் தொகை ரூ.1,00,000/- செலுத்தி மறைமுக டெண்டர் போடுவதற்காக அதற்குரிய டெண்டர் படிவம் தரும்படி கேட்டபொழுது அவ்வாறு டெண்டர் விட இயலாது. விருப்பம் இருந்தால் கலந்துக்கொள்ளுங்கள் என செயல் அலுவலர் அலட்சியமாக பதில் கூறியதால் நான் எனது தொகையினை (ரூ.1,00,000/-) திரும்ப பெற்றுக்கொண்டு முறைப்படி ஏலம் நடத்தும் தகவலை எனக்கு தெரிவிக்கும்படி செயல் அலுவலரிடம் தெரிவித்துவிட்டு திரும்பிவிட்டேன். நான் கூறிய வேண்டுகோளை புறக்கணித்துவிட்டு செயல் அலுவலர் அவர்கள் தனது சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களை மட்டும் வைத்துக்கொண்டு வாய்மொழி ஏலம் நடத்தி காயம் செய்துள்ளார். அவ்வாறு விடப்பட்ட ஏலத்தின் விபரங்களை நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்து அதற்கான பதிலை பெற்றுப் பார்க்கும்பொழுது, 01.04.2022 தேதியில் நடந்த ஏலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்த வாரசந்தை குத்தகை தொகையினை ஆண்டு சராசரியைவிட சுமார் ரூ.3,00,000/-க்கு குறைவான தொகைக்கு ஏலம் விட்டு அரசுக்கு வருவாய் இழப்பை திட்டமிட்டு தன் சுய இலாபம் கருதி தான் சார்ந்த சமுதாய நபருக்கு மாநகராட்சி சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாக ஏலத்தை காயம் செய்து தந்துள்ளார் என்பதற்கு பேரூராட்சியின் மூலம் எனக்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட பதில் கடிதமே ஆதாரமாகும். மேலும் ஏல குத்தகைதாரருக்கு அரசு கெஜட்டில் வெளியிடும் முன் புதிய கட்டண உயர்வு பட்டியல்படி வசூல் செய்துகொள்ள அனுமதி அளித்துள்ளார். இது முற்றிலும் அரசு அனுமதி பெறாமல் ஏலதாருக்கு சந்தை குத்தகைக் கட்டணம் உயர்வு குறித்து செயல் அலுவலர் தன் சமுதான நபருக்கு வழங்கிய சலுகையாக தெரியவருகிறது.

மேற்படி செயல் அலுவலர் விதிமுறைக்கு புறம்பாக ஏலம்விட்டு அதன் மூலம் தனக்கு ஆதாயம் தேடிக்கொண்டதை சுட்டிக்காட்டி தகுந்த ஆதாரங்களுடன் நான் இயக்குநர், ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, அலுவலகத்திற்கு புகார் மனு அனுப்பியிருந்தேன் (16.09.2022). அதன் மீது இயக்குநர் அவர்களால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ அலுவலகத்திற்கு உரிய படிவம் மூலம் புகாரை அனுப்பி தக்க பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி செயல் அலுவலரின் செயல், அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளது. ஒரு அரசு அலுவலர் அரசுக்கு ஏல டெண்டர் மூலம் அரசுக்கு வருவாய் ஆதாயம் ஈட்டித்தரும் நடவடிக்கையை தவிர்த்து தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஏலத்தினை தன் இஷ்டம்போல் நடத்திய செயலானது கண்டிக்கத்தக்க செயலாகும். எனவே தாங்கள் அவரையும் அலுவலக ஏலப் பதிவேடுகளை ஆய்வு செய்து நடைபெற்றுள்ள வருவாய் இழப்பினை உரிய வகையில் பேரூராட்சிக்கு திரும்ப கிடைக்கச் செய்ய ஆவன செய்யும்படியும், மேற்படி முறைகேடாக சுய இலாபம் கருதி ஏலம் நடத்திய செயல் அலுவலர் மீது துறை ரீதியாகவும் சட்ட ரீதியாகவும், நடவடிக்கை எடுக்கும்படி சமூகம் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் 22.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் 14.12.2022 நாளிட்ட தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நாமக்கல் மாவட்டம் பிள்ளாநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாரச்சந்தை பிரதி ஞாயிற்றுகிழமை அன்று நடைபெற்று வருகிறது. வாரச்சந்தையில் ஏலமானது அரசாணை, பேரூராட்சி மன்ற தீர்மானம் மற்றும் ஏல நிபந்தனையின் படியும், முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு வரப்படுகிறது.

2022-2023ஆம் ஆண்டிற்கு 26.01.2022 அன்று உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு 19.02.2022 அன்று தேர்தல் நடைப்பெற்றதால், தேர்தல் விதிமுறைகளின்படி, 16.03.2022 இல் நடைப்பெற்ற இப்பேரூராட்சி மன்ற கூட்ட நடவடிக்கை பொருள் எண்.17(17)ன்படி பேரூராட்சியில் உள்ள குத்தகை இனங்களுக்கு 2022-2023–ஆம் ஆண்டிற்கு பகிரங்க ஏலம் மூலமே ஏலம் நடத்த தீர்மானிக்கப்பட்டதின்படி, 31.03.2020-ஆம் தேதி சுங்க வசூல் உயர்த்தப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில், 17.03.2022-ஆம் தேதிய ஏல விளம்பர அறிவிப்பின்படி 24.03.2022-ஆம் தேதியில் ஏலம் நடத்தப்பட்டது. 24.03.2022-ஆம் தேதியில் நடைபெற்ற வாரச்சந்தை ஏலத்தில் திரு. P. மாதேஸ்வரன், திரு. அ. கோபால் ஆகிய இருவர் மட்டுமே கலந்து கொண்டனர், இதில் சர்க்கார் மதிப்ப ரூ.7,50,000/- நிர்ணயம் செய்யப்பட்டதில் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மீண்டும் 28.03.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி மற்றும் இருவர் கலந்து கொண்டு வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் சர்க்கார் மதிப்பு ரூ.7,00,000/-க்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மீள 30.03.2022 நடத்தப்பட்ட ஏலத்தில் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி மற்றும் திரு. அ. கோபால் ஆகியோர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் சர்க்கார் மதிப்பு தொகை ரூ.6,50,000/- இலக்கு நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் யாரும் ஏலம் கோர முன் வரவில்லை. 30.03.2022 ஆம் தேதிய ஏல அறிவிப்பின்படி 01.04.2022 அன்று ஏலம் நடத்தப்பட்டத்தில் திரு. அ. கோபால், திரு. த. சுரேஷ் மற்றும் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி ஆகியோர் ஏலத்தில் கலந்து கொண்டனர். இதில் சர்க்கார் மதிப்பு தொகை ரூ.5,50,000/- நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி நடைபெற்ற ஏலத்தில் திரு. த. சுரேஷ் என்பவர் சர்க்கார் மதிப்பை விட தொகை ரூ.500/- அதிகம் கோரி ரூ.5,50,500/-க்கு ஏலம் கோரினார். மீதமுள்ள திரு. அ. கோபால் மற்றும் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி இருவரும் ஏலக்கேள்வி கோரவில்லை என்ற விபரத்தினை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட தொகைக்கு ஏலம் காயம் செய்ய எவ்வித மறுப்பும் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி கடிதம் வாயிலாக பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவிக்கப்படவில்லை. ஏல நிபந்தனை வரிசை எண்.12–ல் குறிப்பிட்டுள்ளவாறு மறு ஏலம் கோருபவர்கள் ஏலம் காயம் செய்த மறுநாள் மாலை 5.30 மணிக்குள் அதிகபட்சமாக ஏலம் கோரிய தொகைக்கு 20% அதிகம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் ஏலத்தில் கலந்து கொண்ட புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி

மற்றும் வேறு நபர்களால் ஏலம் காயம் செய்ததை மறுத்து கடிதம் மற்றும் மறுஏலம் கோர 20% தொகை ஏதும் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்படவில்லை என்ற விபரத்தினை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நிலையில் கடந்த 10.10.2021 மற்றும் 17.10.2021 ஆம் தேதிகளில் பேரூராட்சி பணியாளர்கள் மூலம் வாரச்சந்தை சுங்கவசூல் பணி மேற்கொள்ளப்பட்டதில் சராசரி தொகை ரூ.9920/- (11,180+8,660=19,840) ஆகும். இதில் பேரூராட்சி பணியாளர்களின் ஊதியம் உட்பட பேரூராட்சிக்கு வரப்பெற்ற வருவாய் ஆகும். இதனை சரிபாக்கும் நேர்வில் தற்போது ஏலம் விடப்பட்ட சராசரி தொகைக்கு கணக்கீடு செய்யும் பட்சத்தில், ரூ.5,50,500 / 52 = ரூ.10586/- ஆகும். எனவே, பேரூராட்சி பணியாளர்களால் வசூல் செய்யப்பட்ட தொகையைவிட கூடுதலான சராசரி தொகைக்கு ஏலம் கோரப்பட்டுள்ளது என்ற விபரத்தினை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில் திரு. த. சுரேஷ் என்பவரால் பிள்ளாநல்லூர் பேரூராட்சி அலுவலக செலுத்துக்சீட்டு எண்.02/2022-23இன்படி குத்தகை தொகை ரூ.5,50,500/- மற்றும் 18 சதவீதம் GST உட்பட தொகை ரூ.99,090/- சேர்த்து ஆக மொத்தம் ரூ.6,49,550/-ஐ 01.04.2022 ஆம் தேதியில் செலுத்தியதன் அடிப்படையில் பேரூராட்சிக்கு இழப்பீடு ஏற்படா வண்ணம் திரு. த. சுரேஷ் என்பவருக்கு ஏலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. இதில் முறைகேடாக எதுவும் செயல்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிள்ளாநல்லூர் பேரூராட்சியின் ஏல விளம்பர ந.க.எண்.76/2022 நாள்:17.03.2022இல் தெரிவிக்கப்பட்ட ஏல நிபந்தனைகளின் படியும், பேரூராட்சி மன்ற தலைவர், உறுப்பினர்கள். பொதுமக்கள் மற்றும் ஏல குத்தகைதாரர்கள் முன்னிலையில் தான் ஒவ்வொரு ஏலமும் நடத்தப்பட்டது.

பேரூராட்சி வாரச்சந்தைக்கு 4 முறை ஏலம் விடப்பட்டதில் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி என்பவரால் முதல் ஏலம் தவிர மீதமுள்ள மூன்று ஏலங்களிலும் கலந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளார். இறுதியாக ஏலம் எடுத்த திரு. த. சுரேஷ் மற்றும் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமி கலந்து கொண்ட ஏலத்தில் புகார் மனுதாரர் திரு. A. இராமசாமியால் எவ்வித ஏலக்கேள்வியும் கோரப்படவில்லை. ஏலம் முடிவடைந்து ஏல நிபந்தனை எண்.12இன் படி ஏலம் கோரிய தொகையை விட கூடுதலாக 20% தொகை செலுத்தி மறு ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என்ற நிபந்தனை புகார் மனுதாரரான வழக்கறிஞர் திரு. A. இராமசாமி பயன்படுத்திக் கொள்ளவில்லை. புகார் மனுதாரர் அனைத்து ஏலத்திலும் கலந்து கொண்டதாக தெரிவித்துள்ளார். ஏல விளம்பரத்தில் மறைமுக டெண்டர் போடுவதற்கு உரிய படிவம் வழங்குவதாக எவ்வித அறிவிப்பும் தெரிவிக்கப்படவில்லை.

பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலராக 06.11.2021 முதல் பணிபுரிந்து வருகிறேன். புகார் மனுதாரரான வழக்கறிஞர் திரு. A. இராமசாமி, செயல் அலுவலராகிய பெண்ணாகிய என் மீது வேண்டுமென்றே தவறான புகார்

தெரிவித்துள்ளார். புகார் மனுதாரருக்கு போதிய கால அவகாசம் அளித்தும் ஏலத்தில் கலந்து கொண்டும் தனக்கு ஏல குத்தகை கிடைக்கவில்லை என்ற நிலையில் என் மீது பிழையான குற்றச்சாட்டினை தெரிவித்துள்ளார்.

01.04.2022 –ஆம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தின் மீதான குத்தகைக்கு ஆறு மாதங்கள் கழித்து வேண்டுமென்றே என்மீது குற்றச்சாட்டினை தெரிவித்துள்ளார். மனுதாரர் RTI வாயிலாக 27.07.2022 கோரிய அனைத்து தகவல்களுக்கும் பேரூராட்சியால் அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

பிள்ளைநல்லூர் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.29(8) நாள்: 25.04.2022 இன் படி 01.04.2022 முதல் நடைபெற்ற ஏலத்தினை திரு. த. சுரேஷ் என்பவருக்கு ஊர்ஜிதம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திரு. த. சுரேஷ் என்பரால் நாளது தேதி வரை எவ்வித சுணக்கமும் இன்றி வாரச்சந்தை ஏலம் நடைபெற்று வருகிறது என்ற விபரத்தினை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

எனவே, புகார் மனுதாரரான திரு. A. இராமசாமி என்பவரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பிழையானது என்றும், எனது விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு என்னை இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 02.02.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.01.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

02.02.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் திரு. A. இராமசாமி என்பவர் ஆஜராகி கீழ்க்காணும் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"நான் பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் மீது சந்தை ஏலம் விட்ட முறையில் அரசு விதிகளை மறந்து தன் அதிகாரத்தை பயன்படுத்தி தவறான முறையில் ஏலத்தை தன் சமுதாய நபர்மூலம் எடுக்க செய்து மறைமுகமாக அவருக்கும் அவரை சார்ந்த பிறருக்கும் பலன் கிடைக்கும் வகையில் குத்தகை உரிமையை தந்துள்ளார் என்று தங்கள் அலுவலகத்திற்கு புகார் மனு அனுப்பியிருந்தேன். அது சம்பந்தமாக தங்களிடம் இருந்து 02.02.2023 மதியம் 12.30 மணியளவில் மேற்படி புகார் குறித்த விசாரணைக்கு ஆஜார் ஆகும்படி அழைப்பாணை கிடைக்க பெற்றேன். அது சம்பந்தமாக நான் ஏற்கனவே புகார் மனுவுடன் இணைத்து அனுப்பியிருந்த அனைத்தும் ஆதாராங்களாகும். மேலும் அதனையே எனது நேரடி எழுத்து பூர்வ வாக்குமூலமாக கருத்தில் கொள்ளவும்.

இதுநாள்வரை வாய் ஏலம் மற்றும் டெண்டர் முறையில் நடக்கும் ஏலத்தில் உயர்ந்த தொகைக்கு ஏலம் கேட்பவருக்கு டெண்டர் விடப்பட்டு வந்தது தற்சமயம் அவரால் முதலில் வெளியிடப்பட்ட ஏல நோட்டீஸில் வாய் ஏலம் மற்றும் டெண்டர் முறையும் உண்டு என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால் டெண்டர் முறையில் நடந்தால் தன் விருப்பம் போல விட இயலாது என்று தெரிந்து கொண்டு சுயலாபம் கருதி வாய் ஏலம் முறையில் விட்டுள்ளார். மேலும்

கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி தொகையைவிட குறைந்த தொகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளதை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேட்ட கேள்விக்கு அலுவலகம் மூலம் தந்த பதிலில் தெரிந்து கொள்ள முடிகிறது.

எனவே அரசுக்கு வரவேண்டிய வருவாயை திட்டமிட்டு குறைத்து தனக்கு வேண்டிய நபருக்கு குத்தகை உரிமையை தந்துள்ளதை ரத்து செய்துவிட்டு மீண்டும் இந்த 2023–2024 நிதியாண்டில் புதிய ஏலம் விட தக்க உத்தரவு பிறப்பித்து பேரூராட்சி பொருளாதார நலனை பாதுகாக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த மோசடி ஏலத்திற்கு துணை நின்ற அலுவலக உதவியாளரையும் உரிய விசாரணை செய்து அவர் மீதும் துறை சார்ந்த நடவடிக்கை எடுத்து நீதி வழங்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

02.02.2023 அன்று நாமக்கல் மாவட்டம், பிள்ளாநல்லூர் பேரூராட்சியில் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நாமக்கல் மாவட்டம் பிள்ளாநல்லூர் பேரூராட்சியில் குத்தகை இனங்களுக்கு 2022–23ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் மூலமே ஏலம் நடத்த பேரூராட்சி மன்றக் கூட்ட நடவடிக்கை பொருள் எண் 17(17) நாள் 16.3.2022 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பிள்ளாநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாரச் சந்தை நடத்துவதற்கு 17.3.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டு, முதல் ஏலம் 24.3.2022 அன்று நடத்தப்பட்டது. இதில் அரசு மதிப்புத் தொகையாக நிர்ணயிக்கப்பட்ட ரூ. 7,50,000/–க்கு மேற்கண்ட வாரச் சந்தையை யாரும் ஏலம் எடுக்கவில்லை. அதே போன்று இரண்டாவது ஏலம் 28.3.2022 அன்றும், மூன்றாவது ஏலம் 30.3.2022 அன்றும் நடத்தப்பட்டது. அவை முறையே அரசு நிர்ணயித்த மதிப்புத் தொகையான ரூபாய் 7.00 இலட்சம் மற்றும் ரூ 6.50 இலட்சத்திற்கு ஏலம் போகாததால், நான்காவது ஏலம் 1.4.2023 அன்றும் நடத்தப்பட்டது. மேற்கண்ட 1.4.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்புத் தொகையான ரூபாய் 5,50,000/–ஐ விட திரு. த. சுரேஷ் என்பவர் ரூபாய் 500/–ஐ அதிகம் கோரி அதாவது ரூபாய் 5,50,500/–க்கு ஏலம் கோரப்பட்டதைத் தொடர்ந்து ஏலம் உறுதி செய்யப்பட்டது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அரசு நிர்ணயித்த தொகையைவிட கூடுதலாக ரூபாய் 500/–க்கு மேற்கண்ட வார சந்தை ஏலம் விடப்பட்டது என்பதையும், மேற்கண்ட ஏலங்கள் 3 அல்லது 4 நாட்கள் இடைவெளியில் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் அவசர அவசியத்தை முன்னிட்டு ஏலம் விடப்பட்டது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான மன்றத் தீர்மானத்தின் நகல், வாரச்சந்தைக்கு அரசு நிர்ணயித்த மதிப்புத் தொகை, ஏலம் நடத்தப்பட்டது குறித்த பதிவேட்டின் நகல் ஆகியவை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், எனது 14.12.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு

செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

"நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தை சார்ந்த மனுதாரர் திரு.A.இராமசாமி என்பவர் தனது 14.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் நாமக்கல் மாவட்டம், பிள்ளாநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாரச்சந்தை நடத்துவதற்கு 24.03.2022, 28.03.2022, 30.03.2022 மற்றும் 01.04.2022 ஆகிய தேதிகளில் குறுகியகால இடைவெளியில் நடத்தப்பட்டு பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும் வகையில் முறைகேடாக குறைந்த தொகையில் ஏலமானது பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரால் நடத்தப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்துள்ளார்.

நாமக்கல், பிள்ளாநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பேரூராட்சிக்கு சொந்தமான வாரச் சந்தையினை 2022–2025 ஆம் ஆண்டுகளுக்கு குத்தகை பாத்தியதை அனுபவிக்கும் வகையில் 17.03.2022 நாளிட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் 24.03.2022 என நிர்ணயித்து பேரூராட்சியில் தீர்மானம் 16.03.2022 அன்று நிறைவேற்றப்பட்டு, அதன்படி, 24.03.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் அரசு நிர்ணய தொகையான ரூ 7.50/– இலட்சத்திற்கு எவரும் ஏலம் எடுக்கவில்லை.

இந்நிலையில் மேற்படி குத்தகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோராமல் 2வது 24.03.2022 நாளிட்ட ஏலவிளம்பர அறிவிப்பினை வெளியிட்டு, 28.03.2022 நடத்தப்பட்ட ஏலத்திலும் அரசு நிர்ணயித்த ரூ.7.00 இலட்சம் எவரும் கோரவில்லை. எனவே, மீண்டும் 3வது 29.03.2022 நாளிட்ட ஏல விளம்பரப்படி, 30.03.2022 அன்று நடைபெற்ற ஏலத்திலும் அரசு நிர்ணயித்த தொகையான ரூ 6.50/– இலட்சம் எவரும் குறிப்பிடப்படவில்லை என்பதால் இறுதியாக 4வது 30.03.2022 நாளிட்ட ஏல அறிவிப்பின் மூலம் 01.04.2022 அன்று அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையான ரூ.5.50/– இலட்சம் விட கூடுதலாக ரூ.500/– கோரிய திரு.த.சுரேஷ் என்பவருக்கு ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. இவ்வாறு பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் வாரச்சந்தையினை குத்தகை விடும் நேர்வில், 24.03.2022 அன்று நடத்தப்பட்ட முதலாவது ஏலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டும் மற்றும் ஏலமும் நடத்தப்பட்டுள்ளன.

2000–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் விதி 20–ன் கீழ் ரூ.2 கோடி வரையிலான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரல் அறிவிப்பு நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தலுக்கான குறைந்தபட்ச காலம் 15 நாட்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், முதலாவது ஏலம் 7 நாட்கள் இடைவெளியிலும், 2, 3 மற்றும் 4வது இறுதியான ஏலங்கள் முறையே 4 நாட்கள், 1 நாள் மற்றும் 2 நாட்கள் என குறைந்தபட்சம் 15 நாட்கள் அவகாசமின்றி அவசர அவசரமாக ஏலம் நடத்தப்பட்டுள்ளது. மேலும் முதலாவது ஏலத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில், 2–வது, 3–வது மற்றும் 4–வது ஏலங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல் ஏலம் மட்டும் நடத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள்

கோரியிருந்தால் அரசு நிர்ணயித்த குத்தகைத் தொகையினை பெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும். மேலும் அரசு மதிப்பு தொகையையும் தன்னிச்சையாக ஒவ்வொரு ஏலத்திலும் செயல் அலுவலரால் குறைக்கப்பட்டுள்ளது விசாரணையில் தெரியவருகிறது. மேலும் கடந்த ஏலத் தொகையில் 5% அதிகப்படுத்திய மதிப்பீட்டுத் தொகை மற்றும் மூன்று ஆண்டுகளின் சராசரி தொகையில் எது அதிகமோ அத்தொகையை அரசாங்க மதிப்பு தொகையாக கணக்கில் எடுக்காமல், தன்னிச்சையாக அரசு மதிப்பு தொகையைக் கணக்கிட்டும், வருவாய் இழப்பை செயல் அலுவலர் ஏற்படுத்தியிருப்பதும் ஆவணங்களின் மூலமும், விசாரணையிலும் தெரிய வருகின்றது. இவ்வாறு 4 ஏலங்களிலும் ஒப்பந்தப்புள்ளி விதி 20–ன் கீழ் போதிய கால அவகாசம் அளிக்காமல், அரசு மதிப்பு தொகையை குறைத்து தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ள பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் தன்னிச்சையான செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் கண்டிப்பதுடன் இவ்வாறு பொறுப்பற்ற முறையில், அலட்சியப் போக்குடன் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் விதிமீறி செயல்பட்ட பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீதும் உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

பிள்ளாநல்லூர், பேரூராட்சியில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்துவதற்கான துணை விதிகள் (Bylaws) உருவாக்கப்படாததால் அதனை உருவாக்கி ஏல விதிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும் என பிள்ளாநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்துமாறும் மற்றும் அனைத்து பேரூராட்சிகளில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நேர்வுகளை செயல்படுத்தும் போது உரிய துணை விதிகளை முறையாக பின்பற்றி செயல்படுத்திட வேண்டும் என அனைத்து பேரூராட்சிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பிடுமாறும் பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்

The Assistant Director of Town Panchayats of the District has failed in his duties by not guiding the Executive Officer in a responsible way in tender procedure compliance and in this specific case he has defaulted totally. Necessary disciplinary action should be taken against the Assistant Director who has defaulted in his supervisory role by throwing his responsibility to the wind. It is high time that Director of Town Panchayats brought the machinery of Assistant Directors under tight control and accountability by critical and close scrutiny of the work of the Executive Officers under their control. Had the Assistant Director been really effective and sincere this kind of wayward behaviour of the Executive Officer that led to the loss of revenue to the Local Body and violations in not observing the tender rules as per the Rule Book would not have arisen. Hence Director of Town Panchyats is directed to initiate disciplinary action against the Assistant Director of Town Panchayats and Executive Officer of Pilla nallur. The loss of revenue is ordered to be recovered from the Executive Officer. Suitable circular should be sent to all Executive Officers and Assistant Directors of Town

Panchayats instructing strict adherence to tender procedure as per rules and regulations. A compliance reply may be sent to this Forum in a months' time.

2023–ஆம் ஆண்டு, பிப்ரவரி 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. A.இராமசாமி,
க.எண்.2, அண்ணாசாலை,
தேவாங்கர் திருமண மண்டபம்,
இராசிபுரம் டவுன்,
இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
பிள்ளாநல்லூர் பேரூராட்சி,
இராசிபுரம் தாலுக்கா,
நாமக்கல் மாவட்டம்.

3) மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் – 637 003.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்ககம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

1) அரசு கூடுதல் தலைமை செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

2) மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.